## 3. தலைப்பு 1 – அதிமேதகு சனாதிபதி

### 3.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அவற்றுக்கு எதிரே குறிப்பிடப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையினால் அக் கொடுக்கல் வாங்கல்களைத் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

| கொடுக்கல் வாங்கல்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| ஒளி, ஒலிபரப்பு உபகரணங்களுக்கான வாடகை | 61,353,428 | சனாதிபதி செயலகத்திற்குரிய ஊடக உபகரணங்கள் ஏனைய ஊடக விளம்பரப் பணிகளில் ஈபடுத்தப்பட்டதா என்பது தொடர்பில் விசாரணை செய்யப்பட்ட கடிதங்களின் பிரதிகள் |
| தளபாடம் மற்றும் கூடாரங்களை வாடகைக்குப் பெறல் | 30,866,510 | உரிய தேவை மற்றும் தேவையான அளவு தொடர்பில் மொத்த மதிப்பீடு |
| மூன்றாம் தரப்பினருக்கு வழங்கப்பட்ட பணிகள் | 32,781,120 | அவர்களுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகளின் பிரதிகள் |
| மொத்தம் | 125,001,058 | |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) பாதீட்டு முரண்கள்

நான்கு செலவின விடயங்களுக்கு மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்தச் செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 16 சதவீதம் முதல் 68 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

### (ஆ) நிதி ஏற்பாட்டை விஞ்சி பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டமை

-----------------------------------------------------------------------------------------------

இருபத்துமூன்று செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை விஞ்சி ரூபா 963,021,140 தொகையான பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

## 3.3 இணங்காமை

------------------------

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371(அ) இன் பிரகாரம் 64 சந்தர்ப்பங்களுக்குரியதாக வழங்கப்பட்ட ரூபா 7,443,480 கூட்டுத் தொகையான செயல் நிமித்த உப கட்டு நிதி வழங்கப்பட்ட பணிகள் நிறைவுபெற்றதும் உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த செயற்பாடுகள் முடிவடைந்து 02 மாதங்கள் முதல் 12 மாதங்கள் வரையிலான கால தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது.

## 3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------

2014 ஆம் ஆண்டில் சமூக விழுமியங்கள் மற்றும் மத சம்பிரதாயங்களைப் பாதுகாப்பதற்காக மக்களை விழிப்புணர்வூட்டும் நோக்கத்துடன் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ‘‘சில்’’ துணியைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 599,999,505 செலவிடப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தேவையான நிதி ஏற்பாடாக இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழு நேரடியாக சனாதிபதி செயலகத்தின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கிற்கு ரூபா 600 மில்லியன் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இதனை நிதிப் பிரமாணக் கோவையின் 170(2) இன் பிரகாரம் நன்கொடையாகக் கிடைத்ததாகக் கருதி நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. பாடசாலைச் சீருடைகள் தொடர்பான துணிகளைக் கொள்வனவு செய்வதற்குரிய 2014 செப்தெம்பர் 04 ஆந் திகதிய 14/1223/563/002 – I/TBR ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் சில் துணி கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 3.5 அரசாங்க கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளைப் பின்பற்றாமை

------------------------------------------------------------------------------------------------------

அலரி மாளிகையில் தேர்தல் பிரிவு மட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் அலுவலகமொன்றைக் கூறிட்டுப் பிரிப்பதற்காக ஒப்பந்தகாரரொருவருக்கு கையளிக்கப்பட்டு அதற்காக மதிப்பிடப்பட்ட செலவினமான ரூபா 930,000 தொகை விசேட செயற்திட்ட அலுவலகத்தின் பெண் உத்தியோகத்தர் ஒருவரால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அந்த மதிப்பிடப்பட்ட செலவினத்தில் சிபாரிசு செய்யப்பட்ட ரூபா 906,250 சனாதிபதி செயலகத்தினால் தீர்க்கப்பட்டிருந்தது.

அந்த ஒப்பந்தகாரருக்குக் கொடுப்பனவு செய்யப்படும்போது அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.6 வழிகாட்டியின் பிரகாரம் மொத்த ஒப்பந்தப் பெறுமதியில் 5 சதவீதம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | | உள்ளபடியான பதவியணியினர் | | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | நிரந்தர | தற்காலிக | நிரந்தர | தற்காலிக | நிரந்தர | தற்காலிக |
| சிரேஷ்ட நிலை | 56 | 162 | 45 | 226 | 11 | 64 |
| மூன்றாம் நிலை | 23 | 95 | 16 | 128 | 07 | 33 |
| இரண்டாம் நிலை | 326 | 80 | 258 | 104 | 68 | 24 |
| ஆரம்ப நிலை | 603 | 142 | 475 | 168 | 128 | 26 |
| மொத்தம் | 1,008 | 479 | 794 | 626 | 214 | 147 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 214 நிரந்தர பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் தற்காலிக பதவிகளின் 147 மிகையான ஊழியர் எண்ணிக்கைக்காக முறையான அங்கீகாரம் பெறப்படடிருக்கவில்லை.